புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# அக இலக்கியத்தில் உள்ளுறையாகும் மலர்கள்

**தோ.ஜெ. ஆஷா டாலின்**
*பதிவு எண்: 19213104020004*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும்*
*அறிவியல் கல்லூரி, களியக்காவிளை,*
***மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்.***

**நெறியாளர்**
***முனைவர் எஸ். தங்கம்,***
*தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,*
*நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும்*
*அறிவியல் கல்லூரி, களியக்காவிளை,*
***மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம்.***

## ஆய்வுச் சுருக்கம்

*உள்ளுறை அகப்பாடலுக்கு உரியது என்கிறார் தமிழ் இலக்கண நூலார். செய்யுளில் அகப்பொருள், புறப்பொருள் என்று இருவகைப்படுகிறது. அகப்பொருள் செய்யுளின் மனிதனின் அக உணர்வினை வெளிப்படுத்தும் இலக்கியம் ஆகும். அகமாந்தர் தாங்கள் முதல் முதலில் கண்டவுடனே தங்க உள்ளத்தில் எழும் உணர்ச்சிப் பெருக்கினை ஆசிரியர்கள் செய்யுள்களில் வெளிப்படையாகக் கூறாமல் அதனை மறைத்து தெரிந்த ஒன்றனுக்கு ஒப்பிட்டு மறைத்து கருத்தினை வெளிப்படுத்துவதே உள்ளுறையின் நோக்கம் ஆகும். உள்ளுறை தெய்வம் ஒழியலான கருப்பொருள்களைக் கொண்டு விளக்குவதே உள்ளுறை ஆகும். தோழி அக இலக்கியத்தில் தலைவியைத் தேற்றவும், தலைவனை புகழ, தலைவனை பழிக்க, தலைவனை திருமணத்துக்கு வற்புறுத்த, பரத்தையிடம் சென்ற தலைவனிடம் தலைவியின் நிலையினை கூற என அனைத்தையும் வெளிப்படையாக எடுத்துரைக்காமல் மறைத்து உள்ளுறையாக கூறப்படுகிறது. கூற தோழிகூற்று நிகழும். இதனைப் போன்றே தலைவி கூற்று, தலைவன் கூற்று என கூற்றுக்கள்*

உள்ளுறையாக அமைகின்றது. தொல்காப்பிய இலக்கண மரபுகளைத் தழுவியே சங்க இலக்கியப் பாடல்கள் இயற்றப்பட்டு உள்ளன. குறிப்பாக அகத்துக்குரிய களவியல், கற்பியல் இவை இரண்டிலும் உள்ளுமை மிக முக்கியமாக எடுத்தாளப்படுகின்றன. உலகின் தொன்மையான மொழி தமிழ் என்பதும் தொன்மையான நாகரீகம் தமிழ் நாகரீகம் என்பது அறிஞர் பெருமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. மனிதன் எந்த அளக்கு மொழியோடும் இலக்கியத்தோடும் இணைந்துள்ளான் என்பதை அறிய முடிகின்றது. மனிதன் இலக்கியம் வகுப்பின், அது இலக்கண அடிப்படையில் தான் அமைகின்றது. எனவே இலக்கணமும் இலக்கியமும் தமிழ் மொழிக்கு வேரும் தூணுமாக இருக்கின்றது. புலவர்கள் அதிகமாக உள்ளுறையை இலக்கியத்தில் கையாளுகின்றனர். உள்ளுறை மனிதனுக்குத் தெரிந்த பொருள்களான கருப்பொருள்களை வைத்து பிற கருத்தை மற்றவர்களுக்கு புலப்படுத்த நினைப்பதனை உள்ளுறையின் முக்கியப் பண்பாக விளங்குகிறது. மனிதன் எந்த அளவு தனது உள் உணர்வினை கூற இயலுமோ அந்த அளவுக்கு அவனது படைப்புத்திறன் மேம்படுகின்றது என்பதனை சங்க இலக்கியம் வாயிலாக அறியலாம். இவை மனிதன் தனது படைப்பினால் நடைமுறை வாழ்க்கைக்கு நேரே நம்மை இழுத்துச் செல்லும், செய்யுளினை, தான் கற்பனை திறனை ஏற்றிக் கூறினும் அதனை இலக்கண நடைமுறையில் வகுத்துக கூறுவதாகவே அமைகின்றது. அதில் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைவது உள்ளுறை ஆகும். ஆசியர்கள் தங்கள் கற்பனைக்கும் உவமைக்கும் பல பொருட்கள் ஒப்புமைப்படுத்தினும் சிறப்புற்ற கருப்பொருளாய் விளங்குவது மலர் ஆகும். மலர் மனித வாழ்வின் தேவைக்கு எத்தகையப் பயனை அளிக்கின்றதோ, அதனைப் போன்ற மலர் இலக்கிய உலகிலும் அதிக பயன் உள்ளதாய் கருதப்படுகிறது. இலக்கியத்தில் மலரை கையாளாத ஆசிரியர்கள் இல்லை என்றே கூற வேண்டும். அந்த அளவுக்கு மலர் இலக்கியத்தில் பின்னிப் பிணைந்துள்ளது. உள்ளுறை இலக்கியத்தில் மலர்கள் எத்தகைய பயனை அளிக்கிறது என்பது குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

தமிழில் அகத்திணைப் பாடல்களுக்கு என்று தனி இலக்கண நெறி உள்ளது. அக இலக்கியத்துக்கு என்று அமைக்கப்பட்டது தான் உள்ளுறை. தலைவன் தலைவியின் காதல், களவு, கற்பு, இல்லறம் இவை அக வாழ்க்கைக்கு உட்பட்டதாய் அமைகின்றது. அகமாந்தர்களின் மன உணர்வினை ஆசிரியர்கள் நேரடியாக உணர்த்தாமல் பாடலின் கருப்பொருள்களைக் கொண்டு மறைத்துக் கூற உள்ளுறை பெரிதும் பயன்படுகிறது. காதலர்கள் தங்கள் மனதின் அக உணர்வினை வெளிப்படுத்துவதற்கு நம் முன்னோர் கண்டெடுத்த இனிமையான இலக்கண நெறியே உள்ளுறை ஆகும். உள்ளுறையை, கருப்பொருளாகிய மலர்கள் எத்தகைய பயனைத் தருகின்றன என்பதனை இக்கட்டுரை ஆய்கிறது.

**உள்ளுறை விளக்கம்**

*உள்+உறை-உள்ளுறை, உள்ளே உறைவது என்பது இதன் பொருள் ஆகும். தெரியாத ஒன்றினை தெரிந்த ஒன்றுக்கு ஒப்புமைப்படுத்தி வெளிப்படுத்திக் கூற உள்ளுறை அமைகிறது. செய்யுள் இலக்கியத்தினை அகம், புறம் என இரண்டாகப் பிரிப்பர். இதில் அகப்பொருளினை விளக்கும் குறிப்புப் பொருளினையே உள்ளுறை என்பர். உள்ளுறையை குறித்து தொல்காப்பியர் தான் முதன் முதலில் குறிப்பிட்டுள்ளார். அதனை தொடர்ந்தே பிற ஆசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் ஆராய்ந்து விளக்கியுள்ளனர். அகப்பாடலுக்கு உரிய உள்ளுறை உவம உருவினை உள்ளே மறைத்திருக்கும் என்பதை,*

*"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக்*
*கொள்ளும் என்பத குறிஅறிந் தோரை" (தொல்.பொரு. 50)*

*எனக் குறிப்பிடுகிறது.*

*உள்ளுறை என்பது கருப்பொருளில் தெய்வம் ஒழியலாக மீதம் உள்ள அனைத்தையும் கொண்டு உள்ளுறை நிலைக்களன் அமையும். உள்ளுறை நிலைக்களன் குறித்து மு.தாசன் "உள்ளுறையானது தெய்வம் ஒழிந்த கருப்பொருளை இடமாகக் கொண்டு வரும் என அதன் இலக்கணத்தை அறிந்தோர் கூறுவர்" (தொல்.கள.பொரு1) எனக் குறிப்பிடுகின்றார்.*

**உள்ளுறை இலக்கணம்**

*செய்யுளில் உள்ளுறைக்கு என்று தனி இலக்கண நெறி உள்ளது. உள்ளுறைக்கு உரிய இலக்கணம் குறித்து தொல்காப்பியர் குறிப்பிடும்போது,*

*"உள்ளுறுத்து இதனொடு பொருள் முடிகென*
*உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்" (தொல். இள. 51) எனவும்,*

*புலவர் தான் கூறவந்த கருத்தை உள்ளே வைத்து உவமைப்படுத்தும் பொருளோடு உட்கருத்து இணைத்து ஒரே கருத்தினை வெளிப்படுத்தி ஒன்றுபட்டு முடிவதே உள்ளுறை இலக்கணம் ஆகும். இதனை இளம்பூரணனார் "உள்ளுறுத்து பொருள் இதனோடு ஒத்து முடிக என உள்ளுறுத்துக் கருதி பொருள் இதனோடு ஒத்து முடிக என, உள்ளுறுத்து உரைப்பது உள்ளுறை உவமம்" என்கிறார். இவ்வாறு உள்ளுறையின் இலக்கத்தை நெறிபட விளக்குகின்றார்.*

**உள்ளுறை உவமை வகைகள்**

*உள்ளுறை இலக்கணத்தை ஆசிரியர் ஐந்தாக வகைப்படுத்திகின்றார்.*

*"உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு*
*கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே" (தொல்.பொ.238)*

*என உள்ளுறையினை, உடனுறை உள்ளுறை, உவம உள்ளுறை, சுட்டு உள்ளுறை, நகை உள்ளுறை, சிறப்பு உள்ளுறை என குற்றமற்ற மரபின் உள்ளுறை ஐந்து என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.*

*செய்யுளில் அக இலக்கியத்தில் உள்ளுறையில் கருப்பொருளாகிய மலர்கள் எவ்வகைப் பயனை அளிக்கின்றன என்பதை அறியலாம்.*

***களவில் தலைவியின் மருட்சி***

*களவு காலம் என்பது தலைவன் தலைவி இருவரும் எவரும் அறியாமல் ஒளிப்பிடத்தில் வைத்து தங்கள் காதலை வளர்த்துக் கொள்வது ஆகும். இங்கு தலைவிக்கு மருட்சி ஏற்படுகின்றது. மருட்சி என்பது இன்பம் துன்பம் இரண்டும் ஒரே நேரத்தில் வரும்போது தலைவி அதனை வெளிப்படுத்தத் தெரியாமல் மருட்சியுற்று நிற்பது ஆகும். இதனை கபிலர் தனது பாடலில் குறிப்பிடும் போது சிறிய கொம்பினை உடைய பசு மலையில் மேயும் போது காந்தள் மலரினை தீண்டியதால், மலரின் தாது உதிர்ந்து கன்றின் மேல் தூவியது, தாதினை உதிர்த்தது தாய் என்று அறியாமல் தனது உடல் வேறுபாட்டினைக் கண்ட கன்று மருண்டு நின்றது. இதனை ஆசிரியர் தலைவன் தலைவியை கனவில் சந்திக்கும் போது தலைவிக்கு தழையாடையைக் கொடுக்கின்றான். இதனை உடுத்தினால் தலைவியின் தாய் இது ஏது என வினவி கடிந்துரைப்பாள். தலைவி தலையாடையினை அணியாவிட்டால் தலைவன் வருந்துவான் இவை இரண்டுக்கும் இடையில் தலைவி மலரின் தாது உதிர்ந்த கன்று போல் மருண்டு நின்றாள் என்பதனை,*

> *"சிலம்பின் மேய்ந்த சிறு கோட்டுச் சேதா*
> *அலங்குகுலைக் காந்தள் தீண்டி, தாது உக*
> *கன்று தான் மருளும் குன்ற நாடன்" (நற்.359:1-3)*

*இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.*

***களவுகாலத்தில் பாங்கியற் கூட்டத்தின் காவல்***

*பாங்கியர் என்பது தலைவியின் அருகில் எப்போதும் காணப்படும் தோழியற் ஆவார். தோழி என்பவள் தலைவிக்கு துணையாய் இருப்பவள், தலைவியின் இன்பம், துன்பம் அனைத்திலும் கூட இருந்து செயல்படுபவள். எப்போதும் தலைவிக்கு கடமை உணர்வோடு செயல்படுபவள். தனது காதலினை தலைவி மறப்பினும் அவளது செயலால் உணர்ந்து கொள்பவள் தோழி. தோழிகள் இலக்கியத்தில் மிக முக்கிய பாத்திரங்கள் ஆக திகழ்கின்றனர். "சங்க இலக்கியத்தில் 882 களவுப் பாடல்கள் உள.842, பாடல் 95 விழுக்காடு, தோழியிற் புணர்ச்சி என்னும் ஒரு வகைக்கே வருவள் இதனால் தோழியின்றிக் காதலர்களின் களவொழுக்கம் நீளாது" (தமிழ் காதல் 50). களவு காலத்தில் தலைவிக்கு தோழிகள் இணைந்து பாதுகாப்பு அளிக்கின்றன. இதனை இலக்கிய ஆசிரியர்,*

> *"நுண்தாது பொருந்திதே கெங்காற் கொழுமுகை*
> *முன்கடகம் கெழீஇய மோட்டுமணமல் அடைகரை,*
> *மேஎய்த் தலைய பிணர்அரைத் தாழை*
> *எயிறுடை நெடுந்தொரு காப்பு பல உடன்*

*வயிறுடை போது வாலிதின் விரீஇ,*
*புலவுப் பெருது அழித்த பூநாறு பரப்பின்" (அக.130:3-7)*

*என குறிப்பிடுகின்றார். கழிமுள்ளியின் பூந்தாது மூடிய சிவந்த காம்பினையுடைய மொட்டினையும், தாழை தனது மலர்களையும் தனது பற்கள் போன்ற முட்களுடைய மடலால் பாதுகாத்து தனது மலர்களை தூய்மையாக மலரச் செய்து அங்கு நிலைபெற்றிருந்த புலால் நாற்றத்தை போரிட்டு வென்றது என்பதன் உட்கருத்தினை ஆசிரியர் கூறும்போது தலைவன் தலைவியின் களவு சந்திப்பில் புலால் போன்ற அவர் பேச்சுக்கள் ஐயங்கள் வரினும் அதனைக் களைந்து இருவரும் எவ்வித ஐயமும் ஏற்படாது தங்கள் காதலில் உறுதியாய் மனம்விட்டு பரவச் செய்வர். எனவே தலைவன், தலைவி களவில் தோழிகள் எவ்வாறு பாதுகாக்கின்றன என்பதை மலர்களைக் கொண்டு ஆசிரியர் விளக்கியுள்ளார்.*

**மலரும் அலரும்**

*அலர் என்பது திருமணம் ஆகாத கன்னிப்பெண் ஆடவனிடம் காதல் கொண்டு பேசி பழகுவதனை ஊரார் பார்த்து அலராக்குவர். மலர் ஒரு இடத்தில் மலர்ந்து அதன் மணம் ஊர் முழுவதும் பரவுவது போல தலைமகளை குறித்து எழும் அலர் ஒரு இடத்தில் பரப்பினும் அலர் ஊர் முழுக்க சென்று அடையும். "ஒரு குமரியின் காதலொழுக்கம் பற்றி ஊர்மகளிர் வாய்க்குள் பேசிக்கொள்வது அம்பல் எனவும், வெளிப்படையாகப் பேசுவது அலர் எனவும் பெயர் பெறும்" (தமிழ்க்காதல் 62). அலர் தூற்றும், ஊரார் என்பது ஆண் பெண் இருவரையும் குறிக்கும். ஆனால் பெரும்பாலும் அலர் பெண்களால் பேசப்படுகின்றது என்பதனை,*

*"அம்பல் மூதூர் அலர்வாய்ப் பெண்டிற்" (நற் 143:7)*

*தலைமக்கள் எவரும் அறியாமல் களவு வாழ்க்கை வாழ்பவர் அதனை அறிந்த ஊரார் வாய்ச்சொற்களால் பேசுவது அலர் எனப்படும். தலைமகள் குறித்த பழியினை ஊர்முழுவதும் ஊரார் பரப்புவது. இது எவ்வாறு பரவுகின்றது என்பதனை குறுந்தொகை ஆசிரியர் குறிப்பிடும் போது குளிரால் சிலிர்த்த மயிரினை உடைய ஆண் குரங்கு பலாக்கனியினைத் தோண்டி எடுக்கத் தீண்டியதால் பூ மணம் பரப்பும் பலாப்பழம் மரத்தில் இருந்து கீழே அருவியில் வீழ்ந்தது. அருவி பலரும் நீர் உண்ணும் துறையில் கொண்டு வந்து தந்தது என்பது குளிரின் காரணமாகத் தலைவன் தலைவியின் நலனை, உன்னைக் கருதி தனது விரல்களால் தீண்டியதால் பூவின் மணம் போன்ற பலாகனி மணம் வீசியது போல் தலைவன் தலைவியை தீண்டிய அலர் ஊர் முழுக்க பரவியது என்பதை*

*"மங்குல் மாமழை வீழ்ந்தென, பொங்குமயிர்க்*
*கலை தொட இமுக்கிய பூநாறு பலவுக்கனி,*

*வரை இழி அருவி உன்துறைத் தரூஉம்" (குறு. 90:3-5)*



www.shcpub.edu.in

*என்ற இப்பாடல் வரிகள் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.*

**திருமணமும் மலரும்**

*திருமணம் என்றச் சொல் வரைதலைக் குறிக்கின்றது. காதல் கொண்ட தலைவன், தலைவி தங்கள் களவில் வந்த அலரினை மாற்ற திருமணம் செய்து கொள்ள வேண்டும். திருமணம் இவனுக்கு இவள் என்ற ஒரு அமைப்பினைக் குறிக்கின்றது. திருமணமாகி இல்லற வாழ்வில் பிரவேசித்த பின்பு தலைவன் தலைவியை எவரும் பழிக் கூறார். தலைவன் தலைவியை ஊரார் அறிய திருமணம் செய்து தன்னுடன் அழைத்துச் சென்று வாழ்தலே திருமணம் ஆகும். "பெண் கொடுக்கும் மரபினர் பெண்ணைக் கொடுக்க பெண்ணைக் கொள்ளும் மரபினர் அவளைத் திருமணச் சடங்கின் மூலம் கொள்வது திருமணம் எனப்படும்" என்பதை (தேவி.தமி.இலக்.378). திருமணத்தினை மலருக்கு ஒப்புமையாக உள்ளுறைப்படுத்தும் போது ஞாழலின் அரும்புகள் முதிர்ந்து பூங்கொத்துக்களாய் நறுமணம் பரப்பியது போன்று தலைவன் தலைவியால் கொண்ட காதல் முறையே திருமணமாக முற்றுபெற்றது என்பதனை,*

*"எக்கா ஞாழல் அரும்பு முதிர அவிழ் இணர்*
*நறிய கமழும் துறைவற்கு*
*இனியமன்ற – என் மாகமக் கவினே" (ஐங். 146:1-3)*

*என்ற வரிகளில் அறியப்படுகின்றன.*

**இல்லற ஒழுக்கம் கைவிடுதல்**

*தலைவன் தனது இல்லத்தையும், தான் மணந்த தலைவியையும் பிரிந்து இன்பத்துக்காக பிற பெண்களை நாடிச் செல்லுதல் எதாவது பரத்தையரோடு இணைவது. பிரிவு தலைவன் தலைவியின் கற்பு வாழ்க்கையில் முதலாவது கூறப்படுவது பரத்தையர் பிரிவு ஆகும். "ஒருவருக்கென வாழாமல் ஆடவர் பலர்பால் சென்று ஒழுகியவரே பரத்தையர்" (அகத். 55) பரத்தையர் பொருளுக்காக ஆடவரிடம் சேர்ந்து, பொருள் இழந்த ஆண்களை தள்ளிவிடும் பழக்கம் உடையவர் ஆவாள். பரத்தையர் பிரிவு மலருக்கு ஒப்பிட்டு பரணர் குறிப்பிடும் போது, நெருப்பு போன்ற தாமரைப் பூக்களின் இடையே விளைந்த நெற்கதிரினை விட்டுவிட்டு தமக்கு கள்ளினை ஏற்றி வந்த வண்டி புதைந்தால் கரும்பினை அடுக்கி அடைகொடுத்து போதை தரும் கள்ளினை நாடிச் செல்வர். இதனைப் போன்று இல்லற ஒழுக்கத்தை கடைபிடிக்கும் தலைவன் தனது இல்லற ஒழுக்கத்தினையும் தாமரை மலர் போன்ற தலைவியையும் விட்டு இன்ப போதை தரும் பரத்தையே நாடிச் செல்கின்றான் என்பதனை இப்பாடல் உணர்த்துகின்றது.*

*"எரிக அகைந்தன்ன தாமரை இடை இடை*
*அரிந்துகால் குவிந்த செந் நெல் வினைஞர்*
*கள் கொண்டு மறுகும் சாகாடு அளந்த உறின்,*

*ஆய் கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர" (அக. 116:1-4)*

*இங்கு தாமரை மலரை தலைவிக்கு ஒப்புமைப்படுத்தி கூறியுள்ளார் ஆசிரியர். தலைவன் பரத்தையை நாட இல்லற தலைவியை பிரிந்து பரத்தையிடம் சேர்ந்து, அவளது நலனை நுகர்கின்றான். இதனை, ஆசிரியர் மலருக்கும் வண்டுக்கும் ஒப்புமைப்படுத்தி கூறும்போது நிலத்தில் உள்ள மலரின் தாதுவை வண்டு எவ்வாறு மொய்த்து உண்கின்றதோ அதனைப் போன்று தலைவன் பரத்தையின் நலனை நுகர்கின்றான் என்பதாக இங்கு மலராக பரத்தையையும், வண்டாக தலைவனையும் குறிப்பிட்டு உள்ளனர்.*

*"……………………………………… பழனத்து*

*வண்டு தாது, ஊதும் ஊரன்" (ஐங். 89: 2,3)*

*என்பதாக இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.*

**முடிவுரை**

*தமிழ் அக இலக்கியங்களுக்கு என்று அமைக்கப்பட்டது உள்ளுறை. செய்யுளில் மறைந்து வரும் கருத்தினை உள்ளுறை என்கிறோம். அக இலக்கியத்தில் பெரும்பாலும் ஆசிரியர்கள் கருத்தை நேரடியாக விளக்கமாட்டார்கள். அதனை உள்ளுறையாகவோ, கருப்பொருள் கொண்டு விளக்குவார். கருப்பொருளில் குறிப்பிடத்தக்க மலரினை உள்ளுறையாக வைத்து அக இலக்கியம் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.*

**துணைநூற் பட்டியல்**


1. *தமிழண்ணல் (2003), தொல்காப்பியம் பொருளதிகாரம், மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கார தெரு, பாரிமுனை, சென்னை - 600108.*
2. *மு.தாசன் (2011), தொல்காப்பிய களஞ்சியம், அபிலா பதிப்பகம், மேலப்பொட்டக்குழி, தெருவுக்கடை அஞ்சல் - 629157, குமரி மாவட்டம்.*
3. *இளம்பூரணனார் (2005), தொல்காப்பியம் பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம் 3, கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை-14*
4. *பாலசுப்பிரமணியன் கு.வெ.(2004) சங்க இலக்கியம் நற்றிணை (நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், 41பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098.*
5. *மாணிக்கம் வ.சுப்,(2005), தமிழக்காதல், மெய்யப்பன் பதிப்பகம் 53, புதுத்தெரு, சிதம்பரம் – 608001.*
6. *செயபால். இரா (2004), சங்க இலக்கியம் அகநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 600 091.*
7. *தட்சிணாமூர்த்தி.அ (2004) சங்க இலக்கியம் ஐங்குறுநூறு (நியூ.செ).*